**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.80/2020**

**வா.சா. 1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | திருமூர்த்தி |
| தகப்பனார் பெயர் | : | சுப்பிரமணி |
| வயது | : | 44/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | அய்யலூர் |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 02.08.2024ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**1 முதல் 18 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

A செடியூலில் கண்ட சொத்துக்களை வாதிகள் பூர்வீகமாக அனுபவித்து வருகிறோம். A செடியூலில் கண்ட சொத்துக்கள் விவசாய நிலமாகும். மேற்கண்ட விவசாய நிலத்தை முன்னோர்கள் காலத்தில் இருந்து அனுபவித்து வருகிறோம். மேற்படி என்னுடைய பிராதில் உள்ள சொத்து விவரத்தில் A செடியூலில் சர்வே எண்.1129/2 கிழமேலாக செல்லும் வண்டிப்பாதையில் பொதுவாக புழங்கிக்கொள்ளும் பொதுவழி நடைப்பாதை பாத்தியம் உட்பட குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2020ம் வருடம் சங்கராயி என்பவரிடமிருந்து B செடியூல் சொத்தை கிரையம் பெற்ற பிறகு தான் பாதை பாத்தியம் பிரச்சனை ஏற்பட்டது என்றால் நானும், என் மனைவியுமான 2ம் வாதியும் கிரையம் பெறவில்லை. 13.06.2012ல் சங்கராயிஅம்மாள் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கும் வாதிகளாகிய எங்களுக்கும், பாதைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாவா A செடியூல் சொத்து சர்வே எண். 1131, சர்வே எண்.1131/1A, சர்வே எண். 1131/1D என்ற புல எண்களுக்கு செல்லக்கூடிய விவசாய நிலங்களுக்கு செல்லக்கூடிய பாதைக்கும், B செடியூலில் கண்ட சர்வே எண்.1129/4ல் உள்ள பொதுப்பாதைக்கும் சம்பந்தம் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. 2020ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.5 ல் தான் அய்யலூர் டவுன் பேரூராட்சிக்கு கட்டுப்பட்ட கிழமேலாக செல்லும் பொது வண்டிப்பாதைக்குரிய சர்வே எண்.1129/2 ஐ குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு வண்டிப்பாதைகள் எதுவும் கிடையாது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் மூல ஆவணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னாலும், மேலும் அது தொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அய்யலூர் டவுன் பேரூராட்சிக்கு செல்லும் பாதை கிழமேலாக செல்கிறது என்றால் சரிதான். மேற்படி பாதையின் இருபுறமும் பிரதிவாதிகள் தான் வீடுகட்டி வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அய்யலூர் டவுன் பஞ்சாயத்திற்கு பாத்தியப்பட்ட புல எண்.1121/4 ல் கிழமேலாக 300 அடி நீளத்திற்கு 10 அடி அகலத்தில் செல்லக்கூடிய வண்டிப்பாதையில் முறையாக தணிக்கை செய்து 250 நீளத்துடன் தார் சாலை அமைத்து இறுதிப்பகுதியோடு முடித்துவிட்டார்கள் என்றால் 300 அடி குறைத்து போட்டுள்ளார்கள். இந்த பொதுப்பாதையைத் தவிர்த்து என்னுடைய பட்டா நிலம் வருவதால் வண்டிப்பாதையை தவிர்த்துவிட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆன பட்டாவில் பொதுப்பாதையைக் காட்டக்கூடிய புல எண்கள் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆன வரைபடத்தில் காட்டக்கூடிய B செடியூலில் செல்லக்கூடிய பொதுப்பாதையை பிரதிவாதிகள் பயன்படுத்திவரும் நிலையில் A செடியூல் விவசாய நிலத்திற்கு பாதையை குறுக்கு வழியில் அடைய வேண்டி தவறாக வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆன கணினி பட்டாவில் பொதுப்பாதையை காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. A செடியூல் சொத்தான என்னுடைய விவசாய நிலத்திற்கு அய்யலூர் மணியக்காரன்பட்டி செல்லும் தார் பாதையில் இருந்து கிழக்கு நோக்கி தார் பாதையை குறுக்கு வழியில் எடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ.1 ஆன வரைபடத்தை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் புல வரைபடம் பாதை சம்பந்தமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புல வரைபடத்தை தாக்கல் செய்திருந்தால் வழக்கின் உண்மைத்தன்மை தெரிய வரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 05.07.2020ம் தேதி பொதுப்பாதையில் செல்லவிடாமல் பிரதிவாதிகள் தடுத்தது பொய்

என்று சொன்னால் சரியல்ல. B செடியூலில் கண்ட பொதுப்பாதைக்கும் A செடியூலில் கண்ட விவசாய நிலத்திற்கும் எவ்வித பாதை பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரி பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**